இந்திய அரசு
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

OFFICIAL LANGUAGE (LEGISLATIVE) COMMISSION
STATE OF MADRAS

# 1940 ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்புச் சட்டம்

(சட்ட எண் 10/1940)

(1984, ஜூன் 20 அன்று இருந்தவாறு)

# THE ARBITRATION ACT, 1940

(Act No. 10 of 1940)

(As on 20th June, 1984)

தமிழாக்கம்:
(இந்திய அரசிற்காக)
தமிழ்நாடு ஆட்சிமொழி (சட்டம்) ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
1988

விலை ரூ. 8-35

901
18.10.87

# முன்னுரை

1984, ஜூன் 20ஆம் தேதியிலிருந்தவாறுள்ள 1940ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்புச் சட்டத்தின் (சட்ட எண் 10/1940) இந்தப் பதிப்பு, அச்சட்டத்தின் அதிகாரமுறைத் தமிழ் மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. இது 20-6-1984ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, எண் 1, 1 ஆம் தொகுதியில் 20 முதல் 38 வரையிலுள்ள பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரமுறைத் தமிழ் மொழிபெயர்ப்பு, 1973ஆம் ஆண்டு அதிகாரமுறை மொழிபெயர்ப்புகள் (மையச் சட்டங்கள்) சட்டத்தின் (50/1973) 2ஆவது பிரிவின் (அ) கூறின்படி குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரமுறை மொழிபெயர்ப்பு ஆயிற்று.

புதுதில்லி, (ஒப்பம்),
20-6-1984. இந்திய அரசுச் செயலர்.

# PREFACE

This edition of The Arbitration Act, 1940 (10 of 1940), as on the 20th June 1984, contains the authorised translation of that Act in Tamil and the same was published in the Gazette of India, Extraordinary, part XV, Section 1, No.1, Vol. I, dated 20th June 1984, on pages 20 to 38.

The authorised translation in Tamil was published under the authority of the President under clause (a) of Section 2 of the Authorised Translations (Central Laws) Act 1973 (50 of 1973) and on such publication, it became the authorised translation of the Act in Tamil.

New Delhi, (Signed),
20th June 1984. *Secretary to Government of India.*

# 1940 ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்புச் சட்டம்

## (சட்ட எண் 10/1940)

பொருளடக்கம்

### அத்தியாயம் I

### முன்னுரை


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பும் அளாவுகையும் தொடக்கமும் | 1 |
| 2. | பொருள்வரையறைகள் | 1 |


### அத்தியாயம் II

### நீதிமன்றத்தின் இடையீடின்றிப் பொதுவர்தீர்ப்பு


| | | |
|---|---|---|
| 3. | பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டில் உட்கிடையாக உள்ள வகைமுறைகள் | 2 |
| 4. | மூன்றாமவரால் பொதுவர்கள் அமர்த்தப்படவேண்டும் என்ற உடன்பாடு | 2 |
| 5. | அமர்த்தப்பட்ட பொதுவர் அல்லது பொதுநடுவரின் அதிகாரம் நீதிமன்றத்தின் இசைவளிப்பின்றி, பின்னறவு செய்யத்தக்கதன்று | 2 |
| 6. | பொதுவர்தீர்ப்பு உடன்பாடு அதன் தரப்பினரின் இறப்பினால் தீர்ந்துவிடுதல் ஆகாது | 2 |
| 7. | நொடிப்புநிலை பொறுத்த வகைமுறைகள் | 2 |
| 8. | பொதுவரை அல்லது பொதுநடுவரை அமர்த்த நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் | 3 |
| 9. | புதிய பொதுவரை அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒருதனிப் பொதுவரை அமர்த்துவதற்குத் தரப்பினருக்குள்ள அதிகாரம் | 4 |
| 10. | மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொதுவர்களை அமர்த்துவது பற்றிய வகைமுறைகள் | 4 |
| 11. | குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொதுவர்களை அல்லது பொதுநடுவரை நீக்குவதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் | 5 |
| 12. | பொதுவர் நீக்கப்படுகிறவிடத்து அல்லது அவரது அதிகாரம் பின்னறவு செய்யப்படுகிறவிடத்து, நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் | 5 |
| 13. | பொதுவரின் அதிகாரங்கள் | 5 |
| 14. | தீர்ப்பு கையொப்பமிடப்பட்டு முன்னிடப்படுதல் வேண்டும் | 6 |
| 15. | தீர்ப்பை மாற்றியமைக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் | 6 |
| 16. | தீர்ப்பைத் திருப்பியனுப்புவதற்கு அதிகாரம் | 7 |
| 17. | தீர்ப்பின்படியே தீர்ப்பு | 7 |
| 18. | இடைக்கால ஆணையுரைகளைப் பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் | 7 |
| 19. | தீர்ப்பு செல்லாததாகிறவிடத்து அல்லது நீக்கிவிடப்படுகிறவிடத்து பொதுவர்தீர்ப்பைத் தள்ளறவு செய்வதற்கு அதிகாரம் | 8 |

## அத்தியாயம் III

### உரிமைவழக்கு எதுவும் நடப்பில் இல்லாதவிடத்து நீதிமன்றத்தின் இடையீட்டின் பேரில் பொதுவர்தீர்ப்பு

பிரிவுகள் பக்கங்கள்

20. பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டை நீதிமன்றத்தில் முன்னிடுவதற்கான விண்ணப்பம் .. .. .. .. .. .. 8

## அத்தியாயம் IV

### உரிமைவழக்குகளில் பொதுவர்தீர்ப்பு

21. உரிமைவழக்கின் தரப்பினர்கள் சாட்டுகை ஆணையுரைக்காக விண்ணப்பிக்கலாம் .. .. .. .. .. 9

22. பொதுவரை அமர்த்துதல் .. .. .. .. .. 9

23. சாட்டுகை ஆணையுரை .. .. .. .. .. 9

24. தரப்பினர்களில் சிலரால் பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டப்படுதல் 9

25. இந்த அத்தியாயத்தின்படியான பொதுவர்தீர்ப்புகளுக்கு பொருந்தத்தக்க வகைமுறைகள் .. .. .. .. 9

## அத்தியாயம் V

### பொது

26. அத்தியாயம் பொருந்துதல் .. .. .. .. 10

27. இடைக்காலத்தீர்ப்பு வழங்குவதற்குப் பொதுவர்களுக்கு உள்ள அதிகாரம் .. .. .. .. .. 10

28. தீர்ப்பு வழங்குவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கு நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் .. .. .. .. .. 10

29. தீர்ப்புகள் வழங்கப்படுவதன் பேரில் வட்டி .. .. .. 10

30. தீர்ப்பை நீக்கிவிடுவதற்கான காரணங்கள் .. .. .. 10

31. அதிகாரவரம்பு .. .. .. .. .. 10

32. பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டை அல்லது தீர்பை மறுத்தெதிர்க்கிற உரிமை வழக்குகளுக்குத் தடை .. .. .. 11

33. பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டை அல்லது தீர்பை விண்ணப்பத்தின் மூலம் மறுத்தெதிர்த்தல் வேண்டும் .. .. .. 11

34. பொதுவர்தீர்ப்பு உடன்பாடு ஒன்று இருக்குமிடத்து சட்ட நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க அதிகாரம் .. .. 11

35. சட்ட நடவடிக்கைகள் பொதுவர்தீர்ப்பின் மீது ஏற்படுத்தும் விளைவு .. .. .. .. .. 12

36. பொதுவர்தீர்ப்பு உடன்பாடு குறிப்பிட்ட கருத்து வேறுபாடு ஒன்றிற்குப் பொருந்துதல் ஆகாது என்று ஆணையுரை பிறப்பிக்கப் பட்டிருக்கிறவிடத்து, நடவடிக்கை எடுப்பதற்கு தீர்ப்பு ஒன்று இருப்பதை முன் வரைக்கட்டாகச் செய்கிற வகைமுறையானது, அத்தகைய கருத்து வேறுபாட்டுக்குப் பொருந்துதல் ஆகாது என்று ஆணையுரை பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் .. .. .. .. .. 12

37. காலவரம்புகள் .. .. .. .. .. 12

38. பொதுவரின் ஊதியம் அல்லது செலவுத்தொகைகள் பற்றிய கருத்து வேறுபாடுகள் .. .. .. .. 13

## அத்தியாயம் VI

### மேல்முறையீடுகள்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 39. | மேல்முறையீடு செய்யத்தக்க ஆணையுரைகள் .. .. | 14 |


## அத்தியாயம் VII

### பலவகைப்பட்டவை


| | | |
|---|---|---|
| 40. | சிறு வழக்கு நீதிமன்றம், தன்முன் உள்ள உரிமைவழக்கிலுள்ள பொதுவர்தீர்ப்புகள் மீது தவிர, மற்றப் பொதுவர்தீர்ப்புகள் மீது அதிகாரவரம்பு பெற்றிருத்தல் ஆகாது .. .. | 15 |
| 41. | நீதிமன்றத்தின் அதிகாரங்களும் நடைமுறையும் .. .. | 15 |
| 42. | தரப்பினரால் அல்லது பொதுவரால் அறிவிப்பு சார்வு செய்யப் படுதல் .. .. .. .. .. .. | 15 |
| 43. | பொதுவரின் முன்னர் முன்னிலையாவதற்கு நீதிமுறைக் கட்டளைகள் பிறப்பிக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் .. | 15 |
| 44. | விதிகளைச் செய்வதற்கு உயர்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம் .. | 16 |
| 45. | அரசு கட்டுப்பட்டிருத்தல் .. .. .. .. | 16 |
| 46. | சட்டத்தின்படி செய்யப்பட வேண்டிய பொதுவர்தீர்ப்புகளுக்கு இச்சட்டம் பொருந்துதல் .. .. .. .. | 16 |
| 47. | பொதுவர்தீர்ப்புகள் எல்லாவற்றிற்கும் இச்சட்டம் பொருந்துதல் | 16 |
| 48. | நடப்பிலுள்ள சாட்டுகைகளுக்குக் காப்புரை .. .. | 17 |
| 49. | * * * .. .. .. .. .. .. | 17 |
| | முதலாம் இணைப்புப்பட்டியல்.—பொதுவர்தீர்ப்பு உடன்பாடுகளின் உட்கிடையான வரைக்கட்டுகள் .. .. | 17 |
| | இரண்டாம் இணைப்புப்பட்டியல்.— நீதிமன்றத்தின் அதிகாரங்கள் | 18 |
| | மூன்றாம் இணைப்புப்பட்டியல். * * * .. .. | 18 |
| | நான்காம் இணைப்புப்பட்டியல். * * * .. .. | 18 |

# 1940 ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்புச் சட்டம்

(சட்ட எண் 10/1940)[1]

[1940 மார்ச்சு, 11]

பொதுவர்தீர்ப்பு தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தியமைப்பதற்கான ஒரு செய்சட்டம்.

[2][ * * * ] பொதுவர்தீர்ப்பு தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தியமைப்பது உகந்ததாக இருப்பதால்,

இதன்மூலம் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

## அத்தியாயம் I

### முன்னுரை

**குறுந்தலைப்பும் அளாவுகையும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 1940 ஆம் ஆண்டு பொதுவர்தீர்ப்புச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, [3][ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக] இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1940 ஆம் ஆண்டு சூலை முதல் நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பொருள் வரையறைகள்.**

2. இந்தச் சட்டத்தில், பொருளுக்கு அல்லது சூழ்நிலைக்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி,—

(அ) " பொதுவர்தீர்ப்பு உடன்பாடு" என்பது, அதில் பொதுவரின் பெயர் குறிக்கப்பட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இப்போதைய அல்லது எதிர்காலக் கருத்து வேறுபாடுகளைப் பொதுவர் தீர்ப்பிற்கு விடுவதற்கான ஓர் உடன்பாடு என்று பொருள்படும்;

(ஆ) " தீர்பு" என்பது, பொதுவர்தீர்ப்புமுறைத் தீர்பு என்று பொருள்படும்;

(இ) " நீதிமன்றம் " என்பது, சாட்டுகையின் நுதல்பொருளாக அமைகிற வினாக்கள் ஓர் உரிமைவழக்கின் நுதல்பொருளாக இருந்திருந்தால், அவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரவரம்பைக் கொண்டிருக்கின்ற உரிமைவழக்கு நீதிமன்றம் என்று பொருள்படும்; ஆனால், இது 21 ஆம் பிரிவின்படியான பொதுவர் தீர்ப்பு நடவடிக்கையின் நோக்கத்தைப் பொறுத்தமட்டிலன்றி, சிறுவழக்கு நீதிமன்றத்தை உள்ளடக்காது;

(ஈ) " சட்டப்படியான சார்பாளர்" என்பது, இறந்துபோனவரின் சொத்திற்குச் சட்டப்படி சார்பாளராக இருக்கிற ஓர் ஆள் என்று பொருள்படும்; மற்றும் இது இறந்துபோனவரின் சொத்தில் முறையற்றுத் தலையிடுகிற ஆள் எவரையும், ஒரு தரப்பினர், சார்பாளர் தன்மையில் செயற்படுகிறவிடத்து, அவ்வாறு செயற்படுகின்ற தரப்பினரின் இறப்பின்பேரில் சொத்து எந்த ஆளை வந்தடைகிறதோ அந்த ஆளையும் உள்ளடக்கும்;

(உ) " சாட்டுகை " என்பது, பொதுவர் தீர்ப்புக்கான ஒரு சாட்டுகை என்று பொருள்படும்.

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்கள் பற்றிய விவரஉரைக்காக, 1939 ஆம் ஆண்டு இந்திய அரசிதழின் V ஆம் பகுதியில் 142 ஆம் பக்கத்தைக் காண்க; ஆய்வுக் குழுவின் அறிக்கைக்காக, 1940 ஆம் ஆண்டு மேற்படி இந்திய அரசிதழின் V ஆம் பகுதியில் 35 ஆம் பக்கத்தைக் காண்க.

இந்தச் சட்டம், 1963 ஆம் ஆண்டு 6 ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் I ஆம் இணைப்புப்பட்டியலின் மூலம் (1–7–1965 முதல் நடைமுறைக்கு வருமாறு) தாத்ரா மற்றும் நாகர்ஹவேலிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது; 1965 ஆம் ஆண்டு 8 ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் இணைப்புப்பட்டியலின் மூலம் (1–10–1967 முதல் நடைமுறைக்கு வருமாறு) இலட்சத்திவு, மினிகாய் மற்றும் அமிந்திவித் தீவுகளுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது; 1965 ஆம் ஆண்டு 30 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் (15–6–1966 முதல் நடைமுறைக்கு வருமாறு) கோவா, டமண், டையூ ஆகியவற்றுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது, மற்றும் 1968 ஆம் ஆண்டு 26 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் இணைப்புப்பட்டியலின் மூலம் பாண்டிச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

2. " மாகாணங்களில்" என்னும் சொல், 1950 ஆம் ஆண்டு சட்டங்கள் இணக்க ஆணையால் விட்டுவிடப்பட்டது.

3. 1951 ஆம் ஆண்டு 3 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் இணைப்புப் பட்டியலால்" ஆ பகுதி மாநிலங்கள் நீங்கலாக" என்பதற்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

## அத்தியாயம் II

### நீதிமன்றத்தின் இடையீடின்றிப் பொதுவர்தீர்ப்பு

பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டில் உட்கிடையாக உள்ள வகைமுறைகள்.

3. பொதுவர்தீர்ப்பு உடன்பாடானது, அதில் வேறுபட்ட கருத்து இயம்பப்பட்டிருந்தாலன்றி, முதலாம் இணைப்புப்பட்டியலில் கண்டுள்ள வகைமுறைகளை, அவை சாட்டுகைக்கு எந்த அளவுக்குப் பொருந்தத் தக்கனவாயிருக்குமோ அந்த அளவுக்கு உள்ளடக்குவதாகக் கொள்ளப் படுதல் வேண்டும்.

மூன்றாமவரால் பொதுவர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்ற உடன்பாடு.

4. பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர்கள் அந்த உடன் பாட்டில் ஒன்று, பெயர் சொல்லிக் குறிப்பிடப்பட்ட, அல்லது அவ்வப் போது பதவி அல்லது வேலை எதையும் வகிப்பவர் என்னும் முறையில் குறிப்பிடப்பட்ட ஆள் ஒருவரால் அமர்த்தப்படவேண்டிய பொது வருக்கு அல்லது பொதுவர்களுக்குப் பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் படியான சாட்டுகை எதுவும் செய்யப்படுதல் வேண்டும் என்று உடன் படலாம்.

அமர்த்தப்பட்ட பொதுவர் அல்லது பொது நடுவரின் அதிகாரம் நீதிமன்றத்தின் இசைவளிப்பின்றி, பின்னறவு செய்யத் தக்கதன்று.

5. பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டில் இதற்கு மாறான கருத்து இயம்பப்பட்டிருந்தாலன்றி, அமர்த்தப்பட்ட பொதுவர் அல்லது பொது நடுவரின் அதிகாரம், நீதிமன்றத்தின் இசைவளிப்பின்றி, பின்னறவு செய்யப்படத்தக்கதாகாது.

பொதுவர் தீர்ப்பு உடன்பாடு அதன் தரப்பினரின் இறப்பினால் தீர்ந்து விடுதல் ஆகாது.

6. (1) பொதுவர்தீர்ப்பு உடன்பாடு, அதன் தரப்பினர் எவரின் இறப்பினாலும் அந்த இறந்துபோனவர் பொறுத்தோ வேறு எந்தத் தரப் பினர் பொறுத்தோ தீர்ந்துவிடுதல் ஆகாது. ஆனால், அத்தகைய சூழ்நிலையில் இறந்து போனவரின் சட்டப்படியான சார்பாளரால் அல்லது அவருக்கு எதிராக அது நடைமுறைப்படுத்தப்படத்தக்கதாகும்.

(2) பொதுவர் ஒருவரின் அதிகாரமானது, அவர் எந்தத் தரப் பினரால் அமர்த்தப்பட்டாரோ அந்தத் தரப்பினர் எவருடைய இறப்பு காரணமாகவும் பின்னறவு செய்யப்படுதலாகாது.

(3) எந்தச் சட்டத்தின் காரணமாக, வழக்கிடும் உரிமை எதுவும் ஓர் ஆளின் இறப்பினால் மாய்ந்துபோகிறதோ அந்தச் சட்டத் தின் செயற்பாட்டை இந்தப் பிரிவிலுள்ள எதுவும் ஊறுபடுத்தலாகாது.

நொடிப்புநிலை பொறுத்த வகைமுறைகள்.

7. (1) நொடித்துப்போனவர் ஒரு தரப்பினராக இருக்கும் ஓர் ஒப்பந்தத்தின் வரையீட்டின்படி, அதிலிருந்து எழுகின்ற அல்லது அது தொடர்பான கருத்து வேறுபாடுகள் எவையும் பொதுவர் தீர்ப்பிற்குச் சாட்டப்படுதல் வேண்டும் என்று வகைசெய்யப்பட்டிருக்குமிடத்து, பேணுநர் (Receiver) அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டால், மேற்சொன்ன வரையீடு, அத்தகைய கருத்து வேறுபாடுகள் எவற்றிற் கும் எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது அவரால் அல்லது அவருக்கு எதிராக நடைமுறைப் படுத்தப்படத்தக்கதாகும்.

(2) நொடித்துபோனவர் என நீதிமுறையில் தீர்மானிக்கப் பட்டிருக்கிற ஓர் ஆள், நொடிப்புநிலை நடவடிக்கைகளின் தொடக் கத்திற்கு முன்னரே, பொதுவர்தீர்ப்பு உடன்பாடு ஒன்றின் ஒரு தரப் பினராகியிருந்தவிடத்தும், எந்தப் பொருளுக்கு உடன்பாடு பொருந்து கிறதோ அந்தப் பொருள் எதுவும் நொடிப்புநிலை நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது அவற்றின் நோக்கங்களுக்காகத் தீர்மானிக்கப்பட

வேண்டியதாயிருக்குமிடத்தும், அப்போது அந்த வழக்கானது (1) ஆம் உட்பிரிவு அதற்குப் பொருந்தாத ஒன்றாக இருக்குமானால், அந்த ஒப்பந்தத்தின் வேறு தரப்பினர் எவருமோ பேணுநரோ அந்த ஒப்பந்தத்திற்கிணங்க வினாவாகவுள்ள அந்தப் பொருள் பொதுவர்தீர்ப்பிற்குச் சாட்டப்படுதல் வேண்டும் என்று பணிக்கின்ற ஓர் ஆணையுரையைப் பிறப்பிக்கும்படி அந்த நொடிப்புநிலை நடவடிக்கைகளின்மீது அதிகார வரம்பு கொண்டுள்ள நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்; மற்றும் அந்த நீதிமன்றம் அந்த வழக்கின் சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு பொதுவர்தீர்ப்பினால் அந்த வழக்குத் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று கருதும்பொழுது, அவ்வாறே ஓர் ஆணையுரையைப் பிறப்பிக்கலாம்.

(3) இந்தப் பிரிவில் பேணுநர் என்னும் சொல், சொத்தாட்சியரை (Official Assignee) உள்ளடக்கும்.

பொதுவரை அல்லது பொது நடுவரை அமர்த்த நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

8. (1) பின்வரும் நிலைகளில் எதிலும்,—

(அ) தரப்பினர்களின் இசைவுடன் அமர்த்தப்பட வேண்டிய ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட பொதுவர்களுக்குச் சாட்டுகை செய்யப்படுதல் வேண்டும் என்று பொதுவர் தீர்ப்பு உடன்பாடு வகைசெய்கிறவிடத்தும், கருத்து வேறுபாடுகள் எழுந்த பிறகு, அந்த அமர்த்துகைக்கு அல்லது அமர்த்துகைகளுக்குத் தரப்பினர்கள் அனைவரும் இணங்காதவிடத்தும், அல்லது

(ஆ) அமர்த்தப்பட்ட பொதுவர் அல்லது பொதுநடுவர் எவரும் செயற்படாது புறக்கணித்தாலும் அல்லது செயற்பட மறுத்தாலும் அல்லது செயற்படுவதற்குத் திறனற்றவராக இருந்தாலும் அல்லது இறந்துபோனாலும், மற்றும் அந்தக் காலியிடம் நிரப்பப்படக் கூடாது என்று கருதப்பட்டதாகப் பொதுவர் தீர்ப்பு உடன்பாடு காட்டவில்லையென்றாலும், மற்றும் அந்தத் தரப்பினர்கள் அல்லது, நிலவரத்திற்கேற்ப, பொதுவர்கள் அந்தக் காலியிடத்தை நிரப்பாவிட்டாலும், அல்லது

(இ) அந்தத் தரப்பினர்கள் அல்லது பொதுவர்கள், ஒரு பொதுநடுவரை அமர்த்தக் கோரப்பட்டிருந்து, அவரை அவர்கள் அமர்த்தாதவிடத்தும்

தரப்பினர்கள் எவரும், அமர்த்துகைக்கு அல்லது அமர்த்துகைகளுக்கு அல்லது காலியிடத்தை நிரப்புவதற்கு இணங்கவேண்டுமென்று மற்றத் தரப்பினர்களுக்கு அல்லது, நிலவரத்திற்கேற்ப, பொதுவர்களுக்கு எழுத்துமூலமான ஓர் அறிவிப்பைச் சார்வு செய்யலாம்.

(2) மேற்சொன்ன அறிவிப்பு, சார்வு செய்யப்பட்ட பிறகு, பதினைந்து முழு நாட்களுக்குள் அந்த அமர்த்துகை செய்யப்படாவிட்டால், நீதிமன்றமானது, அறிவிப்புக் கொடுத்த தரப்பினரின் விண்ணப்பத்தின்பேரிலும், மற்றத் தரப்பினர்களுக்குக் கேட்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்த பிறகும், நிலவரத்திற்கேற்ப, ஒரு பொதுவரை அல்லது பொதுவர்களை அல்லது பொதுநடுவரை அமர்த்தலாம்; அவர் அல்லது அவர்கள் எல்லாத் தரப்பினர்களின் இசைவுடனும் அமர்த்தப்பட்டிருந்தாற்போன்று, சாட்டுகையைக் குறித்துச் செயற்படுவதற்கும் தீர்ப்பு அளிப்பதற்குமான அந்த அதிகாரத்தைக் கொண்டிருப்பார்கள்.

*புதிய பொதுவரை அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒருதனிப் பொதுவரை அமர்த்துவதற்குத் தரப்பினருக்குள்ள அதிகாரம்.*

9. ஒவ்வொரு தரப்பினரும் ஒரு பொதுவரை அமர்த்தி இரண்டு பொதுவர்களுக்குச் சாட்டுகை செய்யப்படுதல் வேண்டும் என்று பொதுவர் தீர்ப்பு உடன்பாடு வகைசெய்கிறவிடத்து, அப்போது அந்த உடன்பாட்டில் வேறுபட்ட கருத்து இயம்பப்பட்டிருந்தாலன்றி,—

(அ) அமர்த்தப்பட்ட பொதுவர்களில் ஒருவர் செயற்படாது புறக்கணித்தால் அல்லது செயற்பட மறுத்தால், அல்லது செயற்படுவதற்குத் திறனற்றவராயிருந்தால் அல்லது இறந்து போனால், அவரை அமர்த்திய தரப்பினர், அவருடைய இடத்தில் புதிய பொதுவர் ஒருவரை அமர்த்தலாம்;

(ஆ) பொதுவர் ஒருவரை அமர்த்துவதற்காக மற்றைய தரப்பினரால் எழுத்து மூலமான அறிவிப்புக் கொடுக்கப்பட்ட பதினைந்து முழு நாட்களில் முன் கூறப்பட்டபடி ஒரு தரப்பினர், முதன்முறையாக அல்லது பதிலமைப்பு முறையாகப் பொதுவரை அமர்த்தத் தவறியிருந்து, அறிவிப்புக் கொடுப்பதற்கு முன்னர் அத்தகைய மற்றைய தரப்பினர் தம்முடைய பொதுவரை அமர்த்தியிருப்பாரானால், பொதுவரை அமர்த்தியிருக்கிற தரப்பினர் அந்தப் பொதுவரை, சாட்டுகையின் படியான ஒருதனிப் பொதுவராகச் செயற்படுமாறு அமர்த்தலாம்; மற்றும் அந்தப் பொதுவரின் தீர்பு, இசைவுடன் அவர் அமர்த்தப்பட்டிருந்தாற்போன்றே இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும்:

ஆனால், (ஆ) கூறின்படி செய்யப்பட்ட ஒருதனிப் பொதுவரின் அமர்த்துகை எதையும், நீதிமன்றம் நீக்கிவிடலாம்; மேலும், போதிய காரணம் காட்டப்படுவதன் பேரில், ஒரு பொதுவரை அமர்த்தத் தவறுகிற தரப்பினருக்கு மேற்கொண்டும் காலத் தவணை அளிக்கலாம், அல்லது அது பொருத்தமெனக் கருதும் வேறு ஆணையுரையைப் பிறப்பிக்கலாம்.

விளக்கம்.—சாட்டுகையின்மீது பணி தொடங்கி அதை மேல் நடத்தும்படி இரு தரப்பினரில் எவரும் வேண்டிக்கொண்ட பிறகு ஒரு பொதுவர் அல்லது பொதுநடுவர், ஒரு திங்களுக்குள் அந்த வேண்டுகோளுக்கு இணங்கி நடக்கவில்லையென்கிற பொருண்மையானது, 8 ஆம் பிரிவின் மற்றும் இந்தப் பிரிவின் பொருளின்படி செயற்படாது புறக்கணித்தலோ செயற்பட மறுத்தலோ ஆகலாம்.

*மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொதுவர்களை அமர்த்துவது பற்றிய வகைமுறைகள்.*

10. (1) மூன்று பொதுவர்களுக்குச் சாட்டுகை செய்யப்படுதல் வேண்டுமென்றும், ஒவ்வொரு தரப்பினரும் அவர்களில் ஒருவரை அமர்த்துதல் வேண்டுமென்றும், அமர்த்தப்பட்ட இரண்டு பொதுவர்களும் மூன்றாவது பொதுவரை அமர்த்த வேண்டுமென்றும் பொதுவர் தீர்ப்பு உடன்பாடு வகைசெய்கிறவிடத்து, அந்தப் பொதுவர்தீர்ப்பு உடன்பாடானது தரப்பினர்களால் அமர்த்தப்பட்ட இரண்டு பொதுவர்களும் பொது நடுவர் ஒருவரை அமர்த்துவதற்கு வகைசெய்திருந்தாற்போன்றும் ஆனால் அது மூன்றாம் பொதுவரை அமர்த்துவதற்கு வகைசெய்யாதிருந்தாற்போன்றும் செயற்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டவாறல்லாமல் வேறுவகையில் அமர்த்தப்பட வேண்டிய மூன்று பொதுவர்களுக்குச் சாட்டுகை செய்யப்பட வேண்டுமென்று பொதுவர்தீர்ப்பு உடன்பாடு ஒன்று வகைசெய்கிறவிடத்து, பெரும்பான்மையினரின் தீர்பானது மேலோங்கி இயங்கும், அந்தப் பொதுவர்தீர்ப்பு உடன்பாடு வேறுவிதமாக வகைசெய்திருந்தாலன்றி.

(3) மூன்றுக்கு மேற்பட்ட பொதுவர்களை அமர்த்துவதற்குப் பொதுவர் தீர்ப்பு உடன்பாடு வகைசெய்கிறவிடத்து, பெரும்பான்மையினரின் தீர்பு, அல்லது பொதுவர்கள் கருத்து வேறுபாடு கொண்டு சரிசமமாகப் பிரிந்திருந்தால் பொது நடுவரின் தீர்பு மேலோங்கி இயங்கும் பொதுவர் தீர்ப்பு உடன்பாடு வேறுவிதமாக வகைசெய்திருந்தாலன்றி.

*குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொதுவர்களை அல்லது பொது நடுவரை நீக்குவதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.*

**11.** (1) சாட்டுகையின்மீது பணி தொடங்குவதிலும், அதை மேல் நடத்துவதிலும், தீர்ப்பு வழங்குவதிலும் எல்லா வகையிலும் தகவான விரைவுடன் செயற்படத் தவறுகிற பொதுவரை அல்லது பொது நடுவரை நீதிமன்றம், சாட்டுகையின் தரப்பினர் எவருடைய விண்ணப்பத்தின் பேரிலும் நீக்கிவிடலாம்.

(2) தவறாக நடந்துகொண்டுள்ள அல்லது நடவடிக்கைகளைத் தவறாக நடத்தியிருக்கிற பொதுவரை அல்லது பொதுநடுவரை நீதிமன்றம் நீக்கிவிடலாம்.

(3) இந்தப் பிரிவின்படி ஒரு பொதுவர் அல்லது பொதுநடுவர் நீக்கப்படுகிறவிடத்து, அவர், தமது பணிகளுக்காக ஊதியம் எதுவும் பெறுவதற்கு உரிமையுடையவராகார்.

(4) இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், ''சாட்டுகையை மேல்நடத்துதல்'' என்ற சொற்றொடரானது, பொது நடுவருக்குச் சாட்டுதல் தேவைப்படுகிற வழக்கொன்றில் அந்தத் தரப்பினர்களுக்கும் பொதுநடுவருக்கும் அந்தப் பொருண்மை பற்றி அறிவிப்புக் கொடுப்பதை உள்ளடக்கும்.

*பொதுவர் நீக்கப்படுகிறவிடத்து அல்லது அவரது அதிகாரம் பின்னறவு செய்யப்படுகிறவிடத்து, நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.*

**12.** (1) சாட்டுகையின்மீது பணி தொடங்காத ஒரு பொதுநடுவரை அல்லது (எல்லாப் பொதுவர்களும் அல்லாமல்) ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட பொதுவர்களை நீதிமன்றம் நீக்குகிறவிடத்து, பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவருடைய விண்ணப்பத்தின் பேரிலும், காலியிடங்களை நிரப்புவதற்காக அந்த நீதிமன்றம், ஆட்களை அமர்த்தலாம்.

(2) நீதிமன்றத்தின் இசைவளிப்புடன் பொதுவர் ஒருவரின் அல்லது பொதுவர்களின் அல்லது பொதுநடுவரின் அதிகாரம் பின்னறவு செய்யப்படுகிறவிடத்து, அல்லது சாட்டுகையின்மீது பணி தொடங்கியுள்ள ஒரு பொதுநடுவரையோ அல்லது ஒருதனிப் பொதுவர் அல்லது எல்லாப் பொதுவர்களையுமோ நீதிமன்றம் நீக்குகிறவிடத்து, பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவருடைய விண்ணப்பத்தின் பேரிலும் நீதிமன்றமானது,—

(அ) அகற்றப்பட்ட ஆள் அல்லது ஆட்களின் இடத்தில் ஒருதனிப் பொதுவராகச் செயற்படுவதற்கு ஓர் ஆளை அமர்த்தலாம்; அல்லது

(ஆ) சாட்டப்பட்ட கருத்து வேறுபாட்டைப் பொறுத்து, பொதுவர்தீர்ப்பு உடன்பாடு செயற்பாடற்றுப் போகும் என்று ஆணையுரை பிறப்பிக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி ஒரு பொதுவராக அல்லது பொது நடுவராக அமர்த்தப்பட்டிருக்கிற ஓர் ஆள், அவர் பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டிற்கிணங்க அமர்த்தப்பட்டிருந்தாற் போன்று, சாட்டுகை குறித்துச் செயற்படுவதற்கும் தீர்ப்பு அளிப்பதற்குமான அதே அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

*பொதுவரின் அதிகாரங்கள்*

**13.** உடன்பாட்டில் வேறுபட்ட கருத்து இயம்பப்பட்டிருந்தாலன்றி, பொதுவர்கள் அல்லது பொதுநடுவர்—

(அ) முன்னிலையாகிற தரப்பினர்களுக்கும் சான்றாளர்களுக்கும் உறுதிமொழியேற்றுதலைச் செய்துவைக்க,

(ஆ) வழக்கில் உள்ளடங்கிய சட்ட வினாப்பொருள் எதனைப் பற்றியும் நீதிமன்றத்தின் கருத்தைப் பெறுவதற்காக தனி வழக்கு விவரச் சிறப்புரை ஒன்றை எடுத்துரைக்க, அல்லது நீதிமன்றத்தின் கருத்தைப் பெறுவதற்காக அத்தகைய வினாப் பொருளைப் பற்றிய ஒரு தனி வழக்குவிவரச் சிறப்புரை வடிவத்தில் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ எடுத்துரைக்க,

(இ) வரைக்கட்டுள்ள அல்லது மாற்றுப்படியான தீர்வை வழங்க,

(ஈ) ஒரு தீர்ப்பில் தற்செயலான பிசகு அல்லது விடுகை எதிலிருந்தும் எழுகிற எழுத்தர் தவறு அல்லது பிழை எதனையும் திருத்த,

(உ) பொதுவர்தீர்ப்பின் தரப்பினர் எவருக்கும் பொதுவர்களின் அல்லது பொதுநடுவரின் கருத்தின்படி தேவையானதாக இருக்கலாகும் விடுவினாக்களை விடுக்க அதிகாரம் உடையவராவார்.

14. (1) பொதுவர்கள் அல்லது பொதுநடுவர் தங்களுடைய தீர்ப்பை வழங்குகையில் அவர்கள் அதில் கையொப்பமிடுதல் வேண்டும் மேலும், அது வழங்கப்பட்டதையும் கையொப்பமிடப்பட்டதையும் பொதுவர்தீர்ப்பு நடவடிக்கையையும் தீர்ப்பையும் பொறுத்துச் செலுத்தத் தக்க கட்டணங்கள் மற்றும் செலவுகளின் தொகையையும் பற்றிய எழுத்து மூலமான அறிவிப்பைத் தரப்பினர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். தீர்ப்பு கையொப்பமிடப்பட்டு முன்னிடப்படுதல் வேண்டும்.

(2) பொதுவர்கள் அல்லது பொதுநடுவர், பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவரின் அல்லது அத்தகைய தரப்பினர் மூலம் உரிமைகொண்டாடுகிற ஆள் எவருடைய வேண்டுகோளின் பேரிலும் அல்லது நீதிமன்றம் அவ்வாறு பணிக்குமானால் பொதுவர் தீர்ப்பு நடவடிக்கையையும் தீர்ப்பையும் பொறுத்துக் கொடுபடவேண்டிய கட்டணங்களையும் செலவுகளையும் தீர்ப்பை முன்னிடுவதற்கான செலவுத் தொகைகளையும், செலவுகளையும் செலுத்துவதன் பேரில், பொதுவர்கள் அல்லது பொதுநடுவர் முன்பு எடுக்கப்பட்டிருக்கலாகும் மற்றும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கலாகும் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் எவற்றுடனும் சேர்த்து, தீர்ப்பை அல்லது கையொப்பமிடப்பட்ட அதன்படி ஒன்றை நீதிமன்றத்தில் முன்னிடும்படிச் செய்தல் வேண்டும் மேலும் அதன்பேரில் நீதிமன்றம் தீர்ப்பு முன்னிடப்பட்டது பற்றிய அறிவிப்பைத் தரப்பினர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) பொதுவர்கள் அல்லது பொதுநடுவர் 13ஆம் பிரிவின் (ஆ) கூறின்படி தனி வழக்கு விவரச் சிறப்புரை ஒன்றை எடுத்துரைக்கிறவிடத்து, நீதிமன்றம் தரப்பினர்களுக்கு அறிவிப்புக் கொடுத்து அவர்களைக் கேட்டபின்பு, அதன்மீதான தமது கருத்தைப் பகர்தல் வேண்டும்; மேலும் அத்தகைய கருத்து, தீர்ப்புடன் சேர்க்கப்பட்டு அதன் பகுதியாக அமைதலும் வேண்டும்.

15. நீதிமன்றமானது ஆணையுரையின் மூலம்— தீர்ப்பை மாற்றியமைக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

(அ) தீர்ப்பின் ஒரு பகுதி, பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டப்படாத ஒரு பொருளைப் பற்றியுள்ளதாகவும், அத்தகைய பகுதி மற்றப் பகுதியிலிருந்து பிரிக்கப்படக்கூடியதாகவும், சாட்டப்பட்ட பொருள் மீதான முடிபை ஊறுபடுத்தாதிருப்பதாகவும் தோன்றுகிறவிடத்து, அல்லது

(ஆ) தீர்ப்பு, அதன் வடிவத்தில் குறைபாடுள்ளதாக அல்லது அத்தகைய முடிபை ஊறுபடுத்தாமல் திருத்தம் செய்யப்படக் கூடிய தெற்றெனத் தெரிகிற பிழை எதனையும் கொண்டதாக இருக்குமிடத்து, அல்லது

(இ) தீர்பு, தற்செயலான பிசகு அல்லது விடுகை எதிலிருந்தும் எழுகிற எழுத்தர் தவறு அல்லது பிழை ஒன்றைக் கொண்டதாக இருக்குமிடத்து

தீர்பினை மாற்றியமைக்கலாம் அல்லது திருத்தலாம்.

16. (1). (அ) தீர்பு, பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டப்பட்ட பொருள்களில் எதனையும் தீர்மானிக்காது விட்டிருக்கிறவிடத்து அல்லது பொதுவர்தீர்ப்பிற்குச் சாட்டப்படாத பொருள் எதனையும் அது தீர்மானித்து, அத்தகைய பொருள், சாட்டப்பட்ட பொருள்கள் பற்றிய தீர்மானத்தை ஊறுபடுத்தாது பிரிக்கப்படக்கூடியதாய் இல்லாமலும் இருக்கிறவிடத்து, அல்லது

தீர்பைத் திருப்பியனுப்புவதற்கு அதிகாரம்.

(ஆ) தீர்பு நிறைவேற்ற இயலாத அளவுக்குத் திட்டவட்டமாக இல்லாதிருக்கிறவிடத்து, அல்லது

(இ) தீர்பின் சட்டசீலம் குறித்து மறுப்பிற்கிடமிருப்பது முகநிலையிலேயே தெரிகிறவிடத்து,

நீதிமன்றம், தான் பொருத்தமெனக் கருதும் வரைக்கட்டுகளின் பேரில், தீர்பையோ பொதுவர்தீர்ப்புக்காகச் சாட்டப்பட்ட பொருள் எதையுமோ மறுஆய்வுக்காக அப்போதைக்கப்போது பொதுவர்களுக்கு அல்லது பொதுநடுவருக்குத் திருப்பியனுப்பலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி தீர்பு ஒன்று திருப்பியனுப்பப்படுகிறவிடத்து, பொதுவர் அல்லது பொதுநடுவர், அவரது முடிவை எந்தக் காலத்திற்குள் நீதிமன்றத்துக்கு அனுப்பவேண்டுமோ அந்தக் காலத்தை நீதிமன்றம் குறித்தல் வேண்டும்:

ஆனால், அவ்வாறு குறிக்கப்பட்ட காலம் எதுவும், நீதிமன்றத்தின் பிந்திய ஆணையுரை மூலம் நீட்டிக்கப்படலாம்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படி திருப்பியனுப்பப்பட்ட தீர்பை, குறிக்கப்பட்ட காலத்துக்குள் பொதுவர் அல்லது பொதுநடுவர் மறுஆய்வு செய்து தமது முடிவை அனுப்பத் தவறுவதன் பேரில், அது செல்லாததாகும்.

17. தீர்பையோ பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டப்பட்ட பொருள்களில் எதையுமோ, மறுஆய்வுக்காகத் திருப்பியனுப்புவதற்கு அல்லது தீர்பை நீக்கி விடுவதற்குக் காரணம் எதுவும் இல்லையென்று நீதிமன்றம் கருதுகிறவிடத்து, தீர்பை நீக்கிவிடுவதற்கு விண்ணப்பம் செய்வதற்கான காலம் முடிவடைந்த பிறகு அல்லது அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டிருந்து அதனை நீதிமன்றம் மறுத்துத் தள்ளிய பிறகு தீர்பின்படி தீர்ப்பைப் பகரமுற்படுதல் வேண்டும்; மேலும் அவ்வாறு தீர்ப்புப் பகரப்பட்டதன் பேரில், தீர்ப்பாணை ஒன்று பிறப்பிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தீர்ப்பாணை, தீர்பிற்கு மிகையானதாக இருக்கிறது அல்லது மற்ற வகையிலும் அதற்கு இணங்கியதாக இல்லை என்ற காரணத்தின் பேரில் தவிர, அதன்மீது மேல்முறையீடு கிடையாது.

தீர்பின்படியே தீர்ப்பு.

18. (1). 17 ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், தீர்பு முன்னிடப்பட்ட பிறகு எந்த நேரத்திலும், முன்னிடப்பட்டது பற்றிய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அந்தத் தீர்பின்மீது பிறப்பிக்கப்படலாகும் தீர்ப்பாணை எதையும் நிறைவேற்றுவதைத் தோல்வியடையச் செய்வதற்கு, காலந்தாழ்த்துவதற்கு அல்லது தடையுறுத்துவதற்குத் தரப்பினர் ஒருவர் நடவடிக்கை எடுத்திருக்கிறார் அல்லது எடுக்கவிருக்கிறார் என்று, அல்லது தீர்பை விரைவாக நிறைவேற்றுவது நேரியதும் தேவையானதும் ஆகும் என்று ஆணையுறுதி ஆவணத்தின் பேரிலோ மற்றப்படியோ நீதிமன்றம் மனத்தெளிவு கொள்ளுவதன் பேரில், தான் தேவையெனக் கருதும் இடைக்கால ஆணையுரைகளைப் பிறப்பிக்கலாம்.

இடைக்கால ஆணையுரைகளைப் பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

(2) எந்த ஆளுக்கெதிராக இடைக்கால ஆணையுரைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த ஆள் எவரும் அத்தகைய ஆணையுரைகளுக்கு எதிராகக் காரணம் காட்டலாம், மற்றும் அந்த நீதிமன்றம், தரப்பினர்களைக் கேட்ட பிறகு, தான் தேவையானதென்றும், நேரியதென்றும் கருதுகிற மேலுமான ஆணையுரைகளைப் பிறப்பிக்கலாம்.

19. ஒரு தீர்பு 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி செல்லாததாகிவிட்டவிடத்து அல்லது தள்ளறவு செய்யப்பட்டவிடத்து, சாட்டுகையை ஆணையுரை மூலம் நீதிமன்றம் தள்ளறவு செய்யலாம். மற்றும் அதன் பேரில், பொதுவர் தீர்ப்பு உடன்பாடானது சாட்டப்பட்ட கருத்து வேறுபாட்டைப் பொறுத்து செயற்பாடற்றுப் போகும் என்று ஆணையுரை பிறப்பித்தல் வேண்டும்.

*தீர்பு செல்லாததாகிறவிடத்து அல்லது நீக்கிவிடப்படுகிறவிடத்து பொதுவர் தீர்ப்பைத் தள்ளறவு செய்வதற்கு அதிகாரம்.*

## அத்தியாயம் III

### உரிமைவழக்கு எதுவும் நடப்பில் இல்லாதவிடத்து நீதிமன்றத்தின் இடையீட்டின் பேரில் பொதுவர் தீர்ப்பு.

20. (1) ஆட்கள் எவரும் பொதுவர் தீர்ப்பு உடன்பாடொன்றினை அதன் நுதல்பொருளைப் பொறுத்து அல்லது அதன் பகுதி ஏதொன்றின் நுதல்பொருளைப் பொறுத்து உரிமைவழக்கு எதுவும் தொடர்வதற்கு முன்பு, செய்துகொண்டிருக்கிறவிடத்தும், அந்த உடன்பாடு எதற்குப் பொருந்துகிறது என்று ஒரு கருத்து வேறுபாடு எழுந்திருக்கிறவிடத்தும் அவர்கள் அல்லது அவர்களில் எவரும், II ஆம் அத்தியாயத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, உடன்பாடானது நீதிமன்றத்தில் முன்னிடப்பட வேண்டுமென்று எந்தப் பொருளுக்குத் தொடர்புடையதோ அந்தப் பொருளின் மீது அதிகாரவரம்பு கொண்டிருக்கிற ஒரு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

*பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டை நீதிமன்றத்தில் முன்னிடுவதற்கான விண்ணப்பம்.*

(2) விண்ணப்பம் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்; மேலும் அந்த விண்ணப்பமானது தரப்பினர்கள் எல்லோராலும் முன்னிடப்பட்டிருக்குமானால் அத் தரப்பினர்களில் வாதி அல்லது வாதிகளாக அக்கறை கொண்டுள்ள அல்லது அக்கறை கொண்டுள்ளதாகக் கோருகிற ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கும், எதிர்வாதி அல்லது எதிர்வாதிகளாக எஞ்சியுள்ளவர்களுக்கும் இடையேயான, அல்லது மற்றப்படி இருக்குமானால், வாதியாக விண்ணப்பதாரருக்கும், எதிர்வாதிகளாகப் பிற தரப்பினர்களுக்கும் இடையேயான ஓர் உரிமைவழக்காக அது எண்ணிடப்பட்டுப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதன் பேரில், அது பற்றிய ஓர் அறிவிப்பு, விண்ணப்பதாரர்கள் அல்லாத உடன்பாட்டின் மற்றத் தரப்பினர்கள் அனைவருக்கும், உடன்பாடு ஏன் முன்னிடப்படலாகாது என்பதற்கு அந்த அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் காலத்திற்குள் காரணம் காட்டுமாறு அவர்களை வேண்டுறுத்தி, கொடுக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் பணித்தல் வேண்டும்.

(4) போதிய காரணம் எதுவும் காட்டப்படாதவிடத்து, நீதிமன்றம் உடன்பாடு முன்னிடப்பட வேண்டுமென்று ஆணையுரை பிறப்பித்தல் வேண்டும். மேலும் உடன்பாட்டிலோ மற்றப்படியோ தரப்பினர்களால அமர்த்தப்பட்ட பொதுவருக்கு, அல்லது, பொதுவர் ஒருவரை அமர்த்துவது பற்றி தரப்பினர்கள் உடன்பட முடியாதிருக்குமிடத்து, நீதிமன்றத்தால அமர்த்தப்பட்ட ஒரு பொதுவருக்குச் சாட்டுகை ஆணையுரை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(5) அதன் பிறகு, அந்தப் பொதுவர் தீர்ப்பு, இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகள் எந்த அளவுக்குப் பொருந்துமாறு செய்யப்படக்கூடுமோ அந்த அளவிற்கு அவற்றிற்கு இணங்க மேல்நடத்தப்படுதலும், அவற்றால் ஆளப்படுதலும் வேண்டும்.

## அத்தியாயம் IV

### உரிமை வழக்குகளில் பொதுவர் தீர்ப்பு

உரிமைவழக்கின் தரப்பினர்கள் சாட்டுகை ஆணையுரைக்காக விண்ணப்பிக்கலாம்.

21. உரிமைவழக்கு எதிலும், அக்கறை கொண்டுள்ள தரப்பினர்கள் அனைவரும், அந்த உரிமைவழக்கில் அவர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ள பொருள் எதுவும், பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டப்படுதல் வேண்டும் என்று உடன்படுகிறவிடத்து, அவர்கள் தீர்ப்புப் பகரப்படுவதற்கு முன்பு எந்தச் சமயத்திலும் சாட்டுகை ஆணையுரைக்காக நீதி மன்றத்திற்கு எழுத்து வடிவில் விண்ணப்பம் செய்யலாம்.

பொதுவரை அமர்த்துதல்.

22. தரப்பினர்கள் உடன்படலாகும் முறையில் பொதுவர் அமர்த்தப்படுதல் வேண்டும்.

சாட்டுகை ஆணையுரை.

23. (1) பொதுவரால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று வேண்டுறுத்தப்படுகிற கருத்து வேறுபாட்டிலுள்ள பொருளை ஆணையுரை மூலம் நீதிமன்றம் அவருக்குச் சாட்டுதல் வேண்டும்; மேலும் தீர்ப்பினை வழங்குவதற்காக, அது தகவானதெனக் கருதுகிற காலத்தை அந்த ஆணையுரையில் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) பொதுவர் தீர்ப்புக்கு ஒரு பொருள் சாட்டப்பட்டிருக்கிறவிடத்து, அந்த உரிமைவழக்கில் நீதிமன்றம், அத்தகைய பொருள்பற்றி இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டிருக்கிற முறையிலும் அளவிலும் அல்லாமல் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகாது.

தரப்பினர்களில் சிலரால் பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டப்படுதல்.

24. உரிமைவழக்குத் தரப்பினர்களில் சிலர் மட்டுமே தங்களுக்கு இடையில் கருத்து வேறுபாட்டிலுள்ள பொருள்களை 21 ஆம் பிரிவிற்கிணங்கவும், அதனால் வகைசெய்யப்பட்டிருக்கிற முறையிலும், பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டப்படுவதற்காக விண்ணப்பிக்கிறவிடத்து, நீதிமன்றம், தான் பொருத்தமெனக் கருதினால், அந்தப் பிரிவில் வகைசெய்யப்பட்ட முறையில் அத்தகைய பொருள்களை (அவை அந்த உரிமை வழக்கின் நுதல்பொருளின் மற்றையப் பகுதியிலிருந்து பிரிக்கப்படக் கூடியனவாக இருக்குமானால்) அவ்வாறு பொதுவர் தீர்ப்புக்குச் சாட்டலாம். ஆனால், மேற்சொன்ன அத்தகைய விண்ணப்பத்தில் சேர்ந்திராத தரப்பினர்களையும், மேற்சொன்ன அந்தச் சாட்டுகைகளில் அடங்கியிராத பொருள்களையும் பொறுத்தவரையில், அத்தகைய விண்ணப்பம் எதுவும் செய்யப்பட்டிராதது போன்றே அந்த உரிமைவழக்குத் தொடர்ந்து நடத்தப்படுதல் வேண்டும். மற்றும் அத்தகைய சாட்டுகைகளைத் தொடர்ந்து வழங்கப்படும் தீர்ப்பு, அந்த விண்ணப்பத்தில் சேர்ந்திருக்கிற தரப்பினர்களை மட்டும் கட்டுப்படுத்துவதாகும்.

இந்த அத்தியாயத்தின்படியான பொதுவர் தீர்ப்புகளுக்குப் பொருந்தத்தக்க வகைமுறைகள்.

25. மற்ற அத்தியாயங்களின் வகைமுறைகள், அவை எந்த அளவுக்குப் பொருந்துமாறு செய்யப்படக் கூடுமோ அந்த அளவுக்கு இந்த அத்தியாயத்தின்படியான பொதுவர் தீர்ப்புகளுக்குப் பொருந்துதல் வேண்டும்:

ஆனால், நீதிமன்றம் 8 ஆம், 10 ஆம், 11 ஆம் மற்றும் 12 ஆம் பிரிவுகளில் சொல்லப்பட்ட சூழ்நிலைகள் எதிலும், காலியிடங்களை நிரப்புவதற்கு அல்லது அமர்த்துகைகளைச் செய்வதற்குப் பதிலாகப் பொதுவர் தீர்ப்பைத் தள்ளறவு செய்யும் ஆணையுரையொன்றைப் பிறப்பித்து, உரிமை வழக்கை மேல்நடத்தலாம்; மற்றும் 19 ஆம் பிரிவின்படி பொதுவர் தீர்ப்பைத் தள்ளறவு செய்யும் ஆணையுரையை நீதிமன்றம் பிறப்பிக்கிறவிடத்து, அது உரிமைவழக்கை மேல்நடத்துதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### பொது

26. இந்தச் சட்டத்தில் மற்றப்படியாக வகைசெய்யப்பட்டவாறல்லாமல், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள், பொதுவர் தீர்ப்புகள் எல்லாவற்றிற்கும் பொருந்துதல் வேண்டும்.

*அத்தியாயம் பொருந்துதல்.*

27. (1) பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டில் வேறுபட்ட கருத்துத் தோன்றினாலன்றி, பொதுவர்கள், அல்லது பொதுநடுவர் தாம் பொருத்தமெனக் கருதினால், இடைக்காலத் தீர்பு ஒன்றை வழங்கலாம்.

*இடைக்காலத் தீர்ப்பு வழங்குவதற்குப் பொதுவர்களுக்குள்ள அதிகாரம்.*

(2) இந்தச் சட்டத்தில் தீர்ப்பு ஒன்றைக்குறிக்கும் சுட்டுகள் எல்லாம் (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தீர்ப்பு ஒன்றைக் குறிக்கும் சுட்டுகளை உள்ளடக்கும்.

28. (1) நீதிமன்றம், தான் பொருத்தமெனக் கருதினால், தீர்பு வழங்குவதற்கான காலம் முடிவடைந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தீர்ப்பு வழங்குவதற்கான காலத்தை அப்போதைக்கப்போது நீட்டிக்கலாம்.

*தீர்ப்பு வழங்குவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கு நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம்.*

(2) உடன்பாட்டின் தரப்பினர் அனைவருடைய இசைவுடனன்றி, பொதுவர் அல்லது பொதுநடுவர் தீர்ப்பு வழங்குவதற்கான காலத்தை, நீட்டிக்கலாம் என்றுள்ள பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டு வகைமுறை எதுவும் செல்லாததாகவும் செயற்பாடற்றதாகவும் இருக்கும்.

29. தீர்பானது பணச் செலுத்தத்திற்கானதாக இருக்குமிடத்தும், அவ்வாறு இருக்கும் அளவுக்கும், நீதிமன்றம், தான் தகவானதென்று கருதுகிற வீதத்தில் தீர்ப்பினால் தீர்மானிக்கப்பட்டபடியும் தீர்ப்பாணையினால் உறுதிசெய்யப்பட்டபடியுமான விடுமுதல் (Principal) தொகையின் மீது தீர்ப்பாணைத் தேதியிலிருந்து வட்டி செலுத்தப்பட வேண்டுமெனத் தீர்ப்பாணையில் ஆணையுரை பிறப்பிக்கலாம்.

*தீர்ப்புகள் வழங்கப்படுவதன்பேரில் வட்டி.*

30. பின்வரும் காரணங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் பேரிலன்றி, தீர்ப்பு நீக்கிவிடப்படுதல் ஆகாது; அதாவது :—

*தீர்ப்பை நீக்கிவிடுவதற்கான காரணங்கள்.*

(அ) பொதுவர் அல்லது பொது நடுவர் தாமே தவறாக நடந்திருக்கிறார் அல்லது நடவடிக்கைகளைத் தவறாக நடத்தியிருக்கிறார்;

(ஆ) பொதுவர் தீர்ப்பைத் தள்ளறவு செய்கின்ற ஆணையுரை ஒன்றை நீதிமன்றம் பிறப்பித்த பிறகு அல்லது 35 ஆம் பிரிவின்படி பொதுவர் தீர்ப்பு நடவடிக்கைகள் செல்லாதவை ஆகிவிட்ட பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது ;

(இ) தீர்ப்பு முறையற்ற வகையில் பெறப்பட்டுள்ளது அல்லது மற்ற வகையிலும் செல்லாதது.

31. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, சாட்டுகைக்குத் தொடர்புடைய பொருளின்மீது அதிகார வரம்பு கொண்டுள்ள நீதிமன்றம் எதிலும் தீர்ப்பு முன்னிடப்படலாம்.

*அதிகார வரம்பு.*

(2) அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், மற்றும் இந்தச் சட்டத்தில் வேறுவகையாக வகைசெய்யப்பட்டாலன்றியும், தீர்ப்பினுடைய அல்லது உடன்பாட்டின் தரப்பினர்களுக்கிடையிலான அல்லது அவர்கள் மூலம் உரிமை கோருகிற ஆட்களுக்கிடையிலான பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டினுடைய செல்லுந்தன்மை, விளைவு அல்லது அதன் உளமை பற்றிய வினாக்கள் எல்லாம் உடன்பாட்டின்படியான தீர்ப்பு முன்னிடப்பட்டிருக்கும் அல்லது முன்னிடப்படலாகும் நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும் ; ஆனால், வேறெந்த நீதிமன்றத்தினாலும் அன்று.

(3) பொதுவர்த்தீர்ப்பு நடவடிக்கைகளை நடத்துவது பற்றிய அல்லது மற்றப்படி அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து எழுகிற விண்ணப்பங்கள் யாவும், தீர்ப்பு முன்னிடப்பட்டிருக்கும் அல்லது முன்னிடப்படலாகும் நீதிமன்றத்திற்குச் செய்யப்படுதல் வேண்டும்; ஆனால், வேறெந்த நீதிமன்றத்திற்கும் அன்று.

(4) இந்தச் சட்டத்தில் வேறு எங்காகிலும் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு எந்தச் சட்டத்திலும் என்ன அடங்கியிருந்த போதிலும், எந்தச் சாட்டுகையிலாவது இந்தச் சட்டத்தின்படியான விண்ணப்பம் எதுவும், அதனை ஏற்றுக் கொள்ளத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்த நீதிமன்றம் மட்டுமே பொதுவர்தீர்ப்பு நடவடிக்கைகள் மீது அதிகாரவரம்பு கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் அந்தச் சாட்டுகையிலிருந்தும் பொதுவர்தீர்ப்பு நடவடிக்கைகளிலிருந்தும் எழுகிற பிந்திய விண்ணப்பங்கள் எல்லாம் அந்த நீதிமன்றத்திலேயே செய்யப்படுதல் வேண்டும்; ஆனால், வேறெந்த நீதிமன்றத்திலும் அன்று.

பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டை அல்லது தீர்ப்பை மறுத்தெதிர்க்கிற உரிமை வழக்குகளுக்குத் தடை.

32. அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், பொதுவர்தீர்ப்பு உடன்பாடு அல்லது தீர்ப்பின் உளமை, விளைவு அல்லது செல்லுந்தன்மையைப் பற்றி ஒரு முடிவைப் பெறுவதற்காக, எந்தக் காரணத்தின் பேரிலேயாயினும் உரிமைவழக்கு எதுவும் தொடரப்படுதல் ஆகாது, மற்றும் இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறல்லாமல் மற்றப்படி பொதுவர்தீர்ப்பு உடன்பாடு அல்லது தீர்ப்பு எதுவும், நடைமுறைப் படுத்தப்படுதலோ, நீக்கிவிடப் படுதலோ, திருத்தம் செய்யப்படுதலோ, மாற்றியமைக்கப்படுதலோ வேறு எந்த வகையிலும் ஊறுபடுத்தப்படுதலோ ஆகாது.

பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டை அல்லது தீர்ப்பை விண்ணப்பத்தின் மூலம் மறுத்தெதிர்த்தல் வேண்டும்.

33. பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் அல்லது தீர்ப்பின் உளமையை அல்லது செல்லுந்தன்மையை மறுத்தெதிர்க்க விரும்புகிற, அல்லது அவ்விரண்டிலொன்றின் விளைவு தீர்மானிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிற பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவரும், அல்லது அவர் மூலம் உரிமைகோருகிற ஆள் எவரும், நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும், மற்றும் அந்த நீதிமன்றம் ஆணையுறுதி ஆவணங்களின் பேரில் அந்த வினாப்பொருளை முடிவுசெய்தல் வேண்டும்:

ஆனால், நீதிமன்றம், நேரியதெனவும், உகந்ததெனவும் கருதுகிற விடத்து, அந்த விண்ணப்பத்தை வேறு சான்றின் பேரிலுங்கூட விசாரிப்பதற்காகக் காலத்தைக் குறிக்கலாம். மேலும், அது வெளிப்படுத்துவதற்காகவும் (Discovery) விவரங்களுக்காகவும் ஓர் உரிமைவழக்கில் தான் பிறப்பிக்கலாகும் ஆணையுரைகளைப் பிறப்பிக்கலாம்.

பொதுவர் தீர்ப்பு உடன்பாடு ஒன்று இருக்குமிடத்து சட்ட நடவடிக்கைகளை நிறுத்திவைக்க அதிகாரம்.

34. சாட்டப்பட வேண்டும் என்று ஒத்துக் கொள்ளப்பட்ட பொருள் எதனையும் பொறுத்து, பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவரும் அல்லது அவர் மூலம் உரிமைகோருகிற ஆள் எவரும், உடன்பாட்டின் மற்றத் தரப்பினர் எவருக்கும் எதிராக அல்லது அவர் மூலம் உரிமைகோருகிற ஆள் எவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகள் எவற்றையும் தொடங்குகிறவிடத்து, அத்தகைய சட்ட நடவடிக்கைகளின் தரப்பினர் எவரும், எழுத்து மூலமான எதிர்வாதுரையை முன்னிடுவதற்கு முன்பு அல்லது அந்த நடவடிக்கைகளின் வேறு எந்தச் செயலையும்

மேற்கொள்வதற்கு முன்பு எந்தச் சமயத்திலும், அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதற்கு, அந்த நடவடிக்கைகள் எந்த நீதித்துறை அதிகார ஆயத்தின் முன்பு நடப்பிலிருக்கின்றனவோ அந்த அதிகார ஆயத்திற்கு விண்ணப்பிக்கலாம்; மற்றும், அத்தகைய அதிகார ஆயம் பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டிற்கிணங்க அந்தப் பொருள் ஏன் சாட்டப்படக் கூடாது என்பதற்குப் போதிய காரணம் இல்லையென்றும், விண்ணப்பதாரர், நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட சமயத்தில் பொதுவர் தீர்ப்பை முறையாக நடத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்வதற்கு ஆயத்தமாகவும், விருப்புடையவராகவும் இருந்தார் என்றும் இருந்து வருகிறார் என்றும், மனத்தெளிவு கொண்டால், நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும் ஆணையுரையைப் பிறப்பிக்கலாம்.

**சட்ட நடவடிக்கைகள் பொதுவர் தீர்ப்பின் மீது ஏற்படுத்தும் விளைவு.**

*35. (1)* சாட்டுகைப் பொருள் மீது சட்ட நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுவிட்ட காரணத்தினால் மட்டுமே சாட்டுகை அல்லது தீர்பு எதுவும் செல்லாததாகாது. ஆனால், சாட்டுகையின் தரப்பினர் அனைவருக்கும் இடையே சாட்டுகைப் பொருள் முழுவதின் மீது சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்து, அது பற்றிய அறிவிப்பு பொதுவர்களுக்கோ, பொது நடுவருக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறபோது 34 ஆம் பிரிவின்படி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் ஆணையுரை பிறப்பிக்கப்பட்டிருந்தாலன்றி நடப்பிலுள்ள சாட்டுகையின் மேல்நடவடிக்கைகள் யாவும் செல்லாதவை ஆகும்.

*(2)* இந்தப் பிரிவில், ''சாட்டுகையின் தரப்பினர்கள்'' என்ற சொற்றொடர், தரப்பினர்களில் எவர் மூலமாகவும், உரிமைகோருபவர்களாயும் தரப்பினர்களுடைய அதே உரிமைமூலத்தின்கீழ் வழக்காடுகிறவர்களாயும் உள்ள ஆட்கள் எவரையும் உள்ளடக்கும்.

**பொதுவர் தீர்ப்பு உடன்பாடு குறிப்பிட்ட கருத்து வேறுபாடு ஒன்றிற்குப் பொருந்துதல் ஆகாது என்று ஆணையுரை பிறப்பிக்கப்பட்டிருக்கிறவிடத்து, நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்ப்பு ஒன்று இருப்பதை முன் வரைக் கட்டாகச் செய்கிற வகைமுறையானது, அத்தகைய கருத்து வேறுபாட்டுக்குப் பொருந்துதல் ஆகாது என்று ஆணையுரை பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.**

*36.* எந்தப் பொருளுக்கு உடன்பாடு பொருந்துகிறதோ அந்தப் பொருள் எதனையும் பொறுத்து நடவடிக்கை எடுப்பதற்குப் பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டின்படி தீர்ப்பு ஒன்று இருப்பது முன்வரைக்கட்டாக இருத்தல் வேண்டும் என்று (பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டில் அல்லது மற்றப்படி) வகை செய்யப்பட்டிருக்கிறவிடத்து, நீதிமன்றம் குறிப்பிட்ட கருத்து வேறுபாடு எதனையும் பொறுத்து அந்த உடன்பாடு செயற்பாடற்றுப் போகும் என்று (இந்தச் சட்டத்தின்படியாயினும் சரி, வேறு ஏதேனும் சட்டத்தின்படியாயினும் சரி) ஆணையுரை பிறப்பிக்குமானால், அந்தக் கருத்து வேறுபாடு தொடர்பாக மேற்சொன்ன வகைமுறையும்கூடச் செயற்பாடற்றுப் போகும் என்று அது மேலும் ஆணையுரை பிறப்பிக்கலாம்.

**கால வரம்புகள்.**

*37. (1).* *1908* ஆம் ஆண்டு இந்தியக் காலவரம்புச் சட்டத்தின் வகைமுறைகள் யாவும், அவை நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்குப் பொருந்துவதைப் போலவே பொதுவர்தீர்ப்புகளுக்கும் பொருந்துதல் வேண்டும்.

*(2)* சாட்டப்பட வேண்டுமென்று ஓர் உடன்பாட்டின் மூலம் வேண்டுறுத்தப்பட்டிருக்கிற பொருள் எதையும் பொறுத்து, அந்த உடன்பாட்டின்படி தீப்ர்பு ஒன்று வழங்கப்படும் வரையில் வழக்குமூலம் எதுவும் விளைதல் ஆகாது என்னும்படிக்கான வரையீடு எதுவும் பொதுவர்தீர்ப்பு உடன்பாடு ஒன்றில் இருந்தபோதிலும், காலவரம்பு

பொறுத்தமட்டில், உடன்பாட்டில் அந்த வரையீடு இல்லையெனில் எந்தக் காலத்தில் வழக்குமூலம் விளைந்திருக்குமோ அந்தக் காலத்தில் அத்தகைய பொருள் எதையும் பொறுத்து வழக்குமூலம் விளைந்திருப்ப தாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் மற்றும் 1908 ஆம் ஆண்டு இந்தியக் கால 9/1908
வரம்புச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் ஒருவர், அதன் மற்றத் தரப்பினர்களுக்கு ஒரு பொதுவரை அமர்த்தும்படிக் கோருகிற அல்லது உடன்பாட்டில் பெயர் குறிக்கப்பட்ட அல்லது பதவிப்பெயர் குறிக்கப்பட்ட ஆள் ஒருவருக்குச் சாட்டுகை செய்யப்படுதல் வேண்டும் என்று பொதுவர்தீர்ப்பு உடன்பாடு வகைசெய்கிறவிடத்து, அவ்வாறு பெயர் குறிப்பிட்ட அல்லது பதவிப் பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்கு அந்தக் கருத்து வேறுபாட்டை அனுப்பும் படிக் கோருகிற அறிவிப்பு ஒன்றைச் சார்வுசெய்கிறபொழுது பொதுவர் தீர்ப்பு தொடங்கியிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) எதிர்காலக் கருத்து வேறுபாடுகளைப் பொதுவர்தீர்ப்புக்குச் சாட்டுவதற்கான ஓர் உடன்பாட்டின் வரையீடுகளானவை, எந்தக் கோரிக் கைகளுக்கு உடன்பாடு பொருந்துமோ அந்தக் கோரிக்கைகள் எவையும், உடன்பாட்டினால் குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்குள் பொதுவர் ஒருவரை அமர்த்த அறிவிப்புக் கொடுக்கப்பட்டாலன்றி, அல்லது பொதுவர் ஒருவர் அமர்த்தப்பட்டாலன்றி, அல்லது பொதுவர்தீர்ப்பு நடவடிக்கையைத் தொடங்குவதற்கு வேறு ஏதாவது செயல் மேற்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, தடை செய்யப்படுதல் வேண்டும் என்று வகைசெய்திருந்து, எந்த ஒரு கருத்து வேறுபாட்டிற்கு இந்த உடன்பாடு பொருந்துமோ அந்தக் கருத்து வேறுபாடு எழுகிறவிடத்து, நீதிமன்றம் வழக்கின் சூழ்நிலைகளில் கால நீட்டிப்பு செய்யாவிட்டால் தகாத இடர்ப்பாடு விளையும் எனக் கருது மானால், அவ்வாறு குறிக்கப்பட்ட காலம் முடிவடைந்துவிட்டபோதிலும், வழக்கில் நீதி வழங்குவதற்குத் தேவைப்படலாகும் வரைக்கட்டுகள் எவையேனும் இருந்தால் அவற்றின்பேரில், தான் முறையானதெனக் கருதுகிற அளவுக்குக் காலத்தை நீட்டிக்கலாம்.

(5) நீதிமன்றம், தீர்ப்பு நீக்கிவிடப்பட வேண்டும் என்று ஆணை யுரை பிறப்பிக்கிறவிடத்து, அல்லது பொதுவர் தீர்ப்புத் தொடங்கிய பிறகு, சாட்டுகை செய்யப்பட்ட கருத்து வேறுபாட்டைப் பொறுத்து பொதுவர் தீர்ப்பு உடன்பாடு செயற்பாடற்றுப்போகும் என்று ஆணையுரை பிறப்பிக் கிற விடத்து சாட்டுகை செய்யப்பட்ட கருத்து வேறுபாட்டைப் பொறுத்த (பொதுவர்தீர்ப்பு உள்ளடங்கலான) நடவடிக்கைகள் தொடங்கப்படுவதற் காக 1908 ஆம் ஆண்டு இந்தியக் காலவரம்புச் சட்டத்தினால் குறிக்கப் 9/1908
பட்ட காலத்தைக் கணக்கிடுகையில், பொதுவர்தீர்ப்பின் தொடக்கத்துக்கும் நீதிமன்ற ஆணையுரையின் தேதிக்கும் இடையிலான காலத்தைக் கழித்து விடுதல் வேண்டும்.

**பொதுவரின் ஊதியம் அல்லது செலவுத் தொகைகள் பற்றியகருத்து வேறுபாடுகள்.**

38. (1) வழக்கு எதிலும், பொதுவர் அல்லது பொதுநடுவர் ஒருவர், தம்மால் கோரப்பட்ட ஊதியம் செலுத்தப்பட்டாலன்றி, தமது தீர்ப்பை அளிப்பதற்கு மறுப்பாரானால், கோரப்பட்ட ஊதியம் விண்ணப்பதாரரால் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டதன்பேரில், பொதுவர் அல்லது பொது நடுவர் விண்ணப்பதாரரிடம் தீர்ப்பை அளித்தல் வேண்டுமென்று நீதிமன்றம் இதற்கெனச் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் பேரில் ஆணையுரை பிறப்பிக்கலாம்; மேலும், தான் பொருத்தமெனக் கருதுகிற விசாரணை ஏதேனும் இருப்பின் அதனைச் செய்த பிறகு, நீதிமன்றத்தில் அவ்வாறு செலுத்தப்பட்ட பணத்திலிருந்து நீதிமன்றம் தகவானதெனக் கருதலாகும்

தொகையை ஊதியமாகப் பொதுவருக்கு அல்லது பொதுநடுவருக்குச் செலுத்த வேண்டும் என்றும், அந்தப் பணத்தில் மீதி ஏதேனும் இருப்பின், அது விண்ணப்பதாரருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்றும் மேற்கொண்டும் ஆணையுரை பிறப்பித்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று, சாட்டுகையின் தரப்பினர் எவராலும் செய்யப்படலாம். அந்தத் தரப்பினருக்கும் பொதுவர் அல்லது பொதுநடுவருக்கும் இடையிலான எழுத்துவடிவிலுள்ள உடன்பாட்டினால், கோரப்பட்ட ஊதியம் குறிக்கப்பட்டிருந்தால் ஒழிய, மேலும், அந்தப் பொதுவர் அல்லது பொதுநடுவர் முன்னிலையாவதற்கும் அத்தகைய விண்ணப்பம் எதிலும் கேட்கப்படுவதற்கும் உரிமையுடையவர் ஆவார்.

(3) பொதுவர்தீர்ப்பின் செலவுத்தொகைகள் குறித்து வினா எதுவும் எழுகிறவிடத்தும், அவை தொடர்பாகத் தீர்ப்பு போதிய வகைமுறை எதையும் கொண்டிராதவிடத்தும், நீதிமன்றம் அத்தகைய செலவுத்தொகைகள் குறித்துத் தான் பொருத்தமெனக் கருதுகிற ஆணையுரைகளைப் பிறப்பிக்கலாம்.

## அத்தியாயம் VI

### மேல்முறையீடுகள்

39. (1) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட பின்வரும் ஆணையுரைகளின்மீது அந்த ஆணையுரையைப் பிறப்பிக்கிற நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பாணைகளின் மீதான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்குச் சட்டப்படி எந்த நீதிமன்றத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு உண்டு (ஆனால், வேறு ஆணையுரைகள் எவற்றின்மீதும் இல்லை) :— மேல்முறையீடு செய்யத்தக்க ஆணையுரைகள்.

(i) பொதுவர் தீர்ப்பை நீக்கிக்கொள்கிற ஆணையுரை ;

(ii) தனி வழக்கு வடிவத்தில் எடுத்துரைக்கப்பட்ட தீர்ப்பு ஒன்றின்மீதான ஆணையுரை ;

(iii) தீர்ப்பு ஒன்றை மாற்றியமைக்கின்ற அல்லது திருத்துகிற ஆணையுரை ;

(iv) பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டை முன்னிடுவதற்கான அல்லது முன்னிட மறுப்பதற்கான ஆணையுரை ;

(v) பொதுவர் தீர்ப்பு உடன்பாடு ஒன்று இருக்குமிடத்து, சட்ட நடவடிக்கைகளை நிறுத்திவைக்கிற அல்லது நிறுத்திவைக்க மறுக்கிற ஆணையுரை ;

(vi) தீர்ப்பு ஒன்றை நீக்கிவிடுகிற அல்லது நீக்கிவிட மறுக்கிற ஆணையுரை :

ஆனால், இந்தப் பிரிவின் வகைமுறைகள், சிறு வழக்கு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையுரை எதற்கும் பொருந்தா.

(2) இநதப் பிரிவின்படியான மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணையுரையின்மீது இரண்டாம் மேல்முறையீடு எதுவும் கிடையாது : ஆனால், இந்தப் பிரிவிலுள்ள எதுவும் உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்யும் உரிமை எதனையும் ஊறுபடுத்தவோ, பறிக்கவோ செய்யாது.

## அத்தியாயம் VII

### பலவகைப்பட்டவை

40. 21 ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது தவிர, பொதுவர்தீர்ப்பு நடவடிக்கைகள் எவற்றின் மீதும் அல்லது அவற்றிலிருந்து எழுகிற விண்ணப்பம் எதன்மீதும் சிறுவழக்கு நீதிமன்றம் அதிகாரவரம்பு கொண்டிராது.

சிறு வழக்கு நீதிமன்றம், தன்முன் உள்ள உரிமை வழக்கி லுள்ள பொதுவர் தீர்ப்புகள் மீது தவிர, மற்றப் பொதுவர் தீர்ப்புகள் மீது அதிகார வரம்பு பெற்றிருத்தல் ஆகாது.

41. இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு—

நீதிமன்றத்தின் அதிகாரங்களும் நடைமுறையும்.

5/1908 (அ) 1908 ஆம் ஆண்டு உரிமைவழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் வகைமுறைகள், இந்தச் சட்டத்தின் படி நீதிமன்றத்தின் முன் உள்ள நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும், மேல்முறையீடுகள் எல்லாவற்றிற்கும் பொருந்துதல் வேண்டும் ; மற்றும்

(ஆ) இரண்டாம் இணைப்புப்பட்டியலில் கண்டுள்ள பொருள்களில் எதனையும் பொறுத்துத் தன் முன்னுள்ள நடவடிக்கைகள் பொருட்டும் அவை தொடர்பாகவும், தான் கொண்டிருக்கிற ஆணையுரைகள் பிறப்பிக்கும் அதே அதிகாரத்தை நீதிமன்றமானது பொதுவர் தீர்ப்பு நடவடிக்கைகளின் பொருட்டும், அவை தொடர்பாகவும், கொண்டிருத்தல் வேண்டும் :

ஆனால், (ஆ) கூறிலுள்ள எதுவும், அத்தகைய பொருள்களில் எதனையும் பொறுத்து ஆணையுரைகள் பிறப்பிப்பதற்காகப் பொதுவர் அல்லது பொதுநடுவரிடம் மேவி நிற்கலாகும் அதிகாரம் எதற்கும் ஊறு விளைவிப்பதாக எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

42. நீதிமன்றத்தின் மூலமாக அல்லாமல் பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் ஒருவரால் அல்லது பொதுவர் அல்லது பொதுநடுவர் ஒருவரால் சார்வு செய்யப்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தினால் வேண்டுறுத்தப்படுகிற அறிவிப்பு எதுவும், பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டில் வகைசெய்யப்பட்டிருக்கிற முறையில் அல்லது அத்தகைய வகைமுறை எதுவும் இல்லாவிட்டால்,—

தரப்பினரால் அல்லது பொதுவரால் அறிவிப்பு சார்வு செய்யப்படுதல்.

(அ) எந்த ஆளுக்கு அது சார்வு செய்யப்படவேண்டுமோ அந்த ஆளிடம் அது கொடுக்கப்படுவதன் மூலம், அல்லது

(ஆ) அந்த ஆளுக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் [1][இந்தியா]விலுள்ள அவருடைய வழக்கமான அல்லது கடைசியாக அறியப்பட்ட இருப்பிடம் அல்லது தொழில் செய்யும் இடத்திற்கு, 1898 ஆம் ஆண்டு இந்திய அஞ்சலகச் சட்டத்தின் VI ஆம் அத்தியாயத்தின்படி, பதிவு செய்யப்பட்ட அஞ்சல் வழியாக அது அனுப்பப்படுவதன் மூலம் சார்வு செய்யப்படுதல் வேண்டும். 6/1898

43. (1) நீதிமன்றம் தன்முன் உள்ள உரிமைவழக்குகளை விசாரிப்பதற்குப் பிறப்பிக்கலாகும் அதே நீதிமுறைக் கட்டளைகளைப் பொதுவர் அல்லது பொதுநடுவர் விசாரிக்க விரும்புகிற தரப்பினர்களுக்கும் சான்றாளருக்கும் பிறப்பித்தல் வேண்டும்.

பொதுவரின் முன்னர் முன்னிலையாவதற்கு நீதிமுறைக் கட்டளைகள் பிறப்பிக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

(2) அத்தகைய நீதிமுறைக் கட்டளைக்கிணங்க முன்னிலையாகத் தவறுகிற அல்லது வேறு தவறுதல் எதையும் செய்கிற அல்லது தாம் சான்று அளிக்க மறுக்கிற அல்லது சாட்டுகையை விசாரணை செய்யும்போது பொதுவரை அல்லது பொதுநடுவரை அவமதிக்கும் குற்றம் எதையும் செய்திருக்கிற ஆட்கள், பொதுவர் அல்லது பொதுநடுவர் எடுத்துரைப்பதன் பேரில், நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுகிற உரிமை

---

1. 1950 ஆம் ஆண்டு சட்டங்கள் இணக்க ஆணையினால் மாற்றாக அமைக்கப்பட்டது.

வழக்குகளில் அவை போன்ற குற்றங்களுக்காக அவர்கள் உள்ளாகும் அதே நலக்கேடு, தண்டங்கள், தண்டனைகள் ஆகியவற்றுக்கு, நீதிமன்றத்தின் ஆணையுரையின் மூலம் உள்ளாவார்கள்.

(3) இந்தப் பிரிவில், "நீதிமுறைக் கட்டளைகள்" என்னும் சொற்றொடர் சான்றாளர்களை விசாரிப்பதற்காகப் பிறப்பிக்கப்படும் அழைப்பாணைகளையும், ஆணைகளையும், ஆவணங்களை முன்னிடுவதற்காகப் பிறப்பிக்கப்படும் அழைப்பாணைகளையும் உள்ளடக்கும்.

44. (அ) தீர்ப்புகளை முன்னிடுதல் மற்றும் அவற்றின் விளைவுறு அல்லது அவற்றின் இணையுறு நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றி, விதிகளைச் செய்வதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

(ஆ) தனி வழக்குகளை முன்னிடுதல் மற்றும் விசாரித்தல் மற்றும் அவற்றின் விளைவுறு அல்லது அவற்றின் இணையுறு நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றி,

(இ) பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டை மீறிய உரிமைவழக்கு அல்லது நடவடிக்கை எதையும் நிறுத்திவைத்தல் பற்றி,

(ஈ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் பற்றி,

(உ) பொதுவாக, இந்தச் சட்டத்தின்படியான நீதிமன்றத்து நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றி,

உயர்நீதிமன்றம் இந்தச் சட்டத்திற்கு இசைவான விதிகளைச் செய்யலாம்.

45. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அரசினைக் கட்டுப்படுத்துவனவாய் இருக்கும். அரசு கட்டுப்பட்டிருத்தல்.

46. 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவும் 7, 12, [1][36], 37 ஆகிய பிரிவுகளும் தவிர்த்து, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு செய்சட்டம் எதன்படியுமான ஒவ்வொரு பொதுவர்தீர்ப்பிற்கும், அந்தப் பொதுவர்தீர்ப்பானது, ஒரு பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டினை ஒட்டி இருந்தாற்போன்றும் அந்த வேறு செய் சட்டம் எதுவும் பொதுவர்தீர்ப்பு உடன்பாடாக இருந்தாற்போன்றும், பொருந்துதல் வேண்டும். இந்தச் சட்டம் எந்த அளவுக்கு அந்த வேறுசெய் சட்டம் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் எவற்றோடும் ஒவ்வாததாக இருக்கிறதோ அந்த அளவுக்குத் தவிர. சட்டத்தின்படி செய்யப்பட வேண்டிய பொதுவர் தீர்ப்புகளுக்கு இச்சட்டம் பொருந்துதல்.

47. 46 ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு எந்தச் சட்டத்தாலும் மற்றபடியாக வகைசெய்யப்பட்டிருக்கிற அளவுக்குத் தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், பொதுவர் தீர்ப்புகள் எல்லாவற்றிற்கும் மற்றும் அவற்றின்படியான நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் பொருந்துதல் வேண்டும்: பொதுவர் தீர்ப்புகள் எல்லாவற்றிற்கும் இச் சட்டம் பொருந்துதல்.

ஆனால், வேறு வகையில் பெறப்பட்ட பொதுவர்தீர்ப்புத் தீர்பானது அதில் அக்கறை கொண்டுள்ள தரப்பினர்கள் அனைவரின் இசைவுடன் ஓர் உரிமை வழக்கில் இணக்கம் அல்லது நேரமைவு என்பதாக எந்த நீதி மன்றத்தின் முன்னர் அந்த உரிமைவழக்கு நடப்பிலிருக்கிறதோ அந்த நீதிமன்றம் எதனாலும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படலாம்.

---

1. 1942 ஆம் ஆண்டு 25 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் II ஆம் இணைப்புப் பட்டியலினால் புகுத்தப்பட்டது.

48. இந்தச் சட்டத்தினால் நீத்தறவு எதுவும் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு நடைமுறையிலிருந்த சட்டமானது இந்தச் சட்டத்தின் தொடக்கத்தில் நடப்பிலிருக்கிற எந்தச் சாட்டுகைக்குத் தொடர்ந்து பொருந்துதல் வேண்டுமோ அந்தச் சாட்டுகை எதற்கும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துதல் ஆகா. நடப்பிலுள்ள சாட்டுகைகளுக்குக் காப்புரை.

49. [நீத்தறவுகளும் திருத்தங்களும்] 1945ஆம் ஆண்டு நீத்தறவு மற்றும் திருத்தம் சட்டத்தின் (VI/1945) 2ஆம் பிரிவினாலும் Iஆம் இணைப்புப் பட்டியலினாலும் நீத்தறவு செய்யப்பட்டது.

## முதலாம் இணைப்புப் பட்டியல்.

(3ஆம் பிரிவைக் காண்க.)

### பொதுவர் தீர்ப்பு உடன்பாடுகளின் உட்கிடையான வரைக்கட்டுகள்.

1. வெளிப்படையாக மற்றப்படி வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, சாட்டுகையானது ஒரு தனிப் பொதுவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

2. இரட்டைப்படை எண்ணிக்கையிலான பொதுவர்களுக்குச் சாட்டுகை செய்யப்பட்டிருந்தால், அவரவர் அமர்த்தப்பட்ட தேதிகளில் எது பிந்தியதோ அத் தேதியிலிருந்து ஒரு திங்களுக்குப் பிந்தாமல் பொதுவர்கள் ஒரு பொதுநடுவரை அமர்த்துதல் வேண்டும்.

3. சாட்டுகையின்மீது பணி தொடங்கிய பின்பு, அல்லது பொதுவர் தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவராலும் எழுத்து மூலமான அறிவிப்பினால் செயற்படுமாறு கோரப்பட்ட பின்பு, நான்கு திங்களுக்குள் அல்லது நீதிமன்றம் இசைவளிக்கலாகும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் பொதுவர்கள் தங்கள் தீர்ப்பினை வழங்குதல் வேண்டும்.

4. பொதுவர்கள் தீர்ப்பினை வழங்காமல் தங்களுடைய காலத்தைக் கடந்துபோகும்படி விட்டுவிட்டால் அல்லது தாங்கள் உடன்பட முடியவில்லை என்று உரைக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு ஒன்றைப் பொதுவர்தீர்ப்பு உடன்பாட்டின் தரப்பினர் எவருக்கேனுமோ பொதுநடுவருக்கோ கொடுத்துவிட்டால், பொதுவர்களுக்குப் பதிலாகப் பொதுநடுவர் உடனடியாகச் சாட்டுகையின்மீது பணி தொடங்குதல் வேண்டும்.

5. சாட்டுகையின்மீது பணி தொடங்கப்பட்ட இரண்டு திங்களுக்குள் அல்லது நீதிமன்றம் இசைவளிக்கலாகும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் பொதுநடுவர் தமது தீர்ப்பினை வழங்குதல் வேண்டும்.

6. சாட்டுகையின் தரப்பினர்களும் அவர்கள் மூலம் உரிமை கோருகிற ஆட்கள் அனைவரும், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, கருத்து வேறுபாட்டில் உள்ள பொருள்களைப் பொறுத்துப் பொதுவர்களால் அல்லது பொதுநடுவரால் உறுதிமொழியின்பேரில் அல்லது உறுதியுரையின் பேரில் விசாரணை செய்யப்படுவதற்கு உட்படுதல் வேண்டும்; மேலும், முன்சொல்லப்பட்டதற்கு உட்பட்டு வேண்டுறுத்தப்படலாகிற அல்லது கோரப்படலாகிற, முறையே தங்கள் உடைமையில் அல்லது அதிகாரத்தில் உள்ள புத்தகங்கள், வரையாவணங்கள் (Deeds), வரைதாள்கள் (Papers) கணக்குகள், எழுத்துக் குறிப்புகள் (Writings), ஆவணங்கள் (Documents) ஆகிய அனைத்தையும் பொதுவர்கள் அல்லது பொதுநடுவர் முன்பு முன்னிடுதல் வேண்டும். மேலும், சாட்டுகை மீதான நடவடிக்கைகளின்போது பொதுவர்களால் அல்லது பொதுநடுவரால் வேண்டுறுத்தப்படலாகும் மற்ற எல்லாவற்றையும் அவர்கள் செய்தல் வேண்டும்.

7. தீர்பானது முடிவானதாகவும் முறையே தரப்பினர்களையும் அவர்கள் மூலம் உரிமை கோருகிற ஆட்களையும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

8. சாட்டுகையின் மற்றும் தீர்ப்பின் செலவுத்தொகை பொதுவரி அல்லது பொதுநடுவரின் உளத்தேர்வின்படி இருத்தல் வேண்டும்; அவர் அத்தகைய செலவுத்தொகை அல்லது அதன் பகுதி எதுவும் யாருக்கு, யாரால், மற்றும் எந்த முறையில் செலுத்தப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம்; மேலும், அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய செலவுத் தொகை அல்லது அதன் பகுதி எதையும் இவ்வளவு என்று கணக்கிடலாம் அல்லது திட்டப்படுத்தலாம்; மற்றும் சட்டத் தொழிலாற்றுநருக்கும், கட்சிக் காரருக்கும் இடையே செலுத்தப்படவேண்டியதான செலவுத் தொகையை அளிக்கலாம்.

## இரண்டாம் இணைப்புப்பட்டியல்

(41ஆம் பிரிவைக் காண்க)

### நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.

1. சாட்டுகையின் நுதல்பொருளாயிருக்கிற சரக்குகள் எவற்றையும் பாதுகாப்பாக வைத்தல், அவற்றின் இடைக்காலப் பாதுகாப்பு அல்லது விற்பனை.

2. சாட்டுகையில் உள்ள வேறுபடும் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்.

3. எந்தச் சொத்து அல்லது பொருள் சாட்டுகையின் நுதல்பொருளாக இருக்கிறதோ அல்லது அதுபற்றிய வினா எதுவும் எழலாகுமோ அந்தச் சொத்து அல்லது பொருள் எதையும் இருத்திவைத்தல், பாதுகாப்பாக வைத்தல், அல்லது ஆய்வு செய்தல், மற்றும் சாட்டுகையின் தரப்பினர் எவருடைய உடைமையிலும் உள்ள நிலம் எதன்மீதும் அல்லது கட்டடம் எதனுள்ளும் நுழைவதற்கு ஆள் எவருக்கும் முன்சொன்ன நோக்கங்களில் எதற்காகவும் அதிகாரமளித்தல் அல்லது முழுத் தகவலையோ சான்றினையோ பெறுவதன் பொருட்டுத் தேவையானவையாக அல்லது உகந்தவையாக இருக்கலாகும் மாதிரிகள் எவற்றையும் எடுப்பதற்கு அல்லது கவனித்துக் கருத்தறிவிப்பு எதையும் செய்வதற்கு அல்லது தேர்வாய்வைச் (Experiment) செய்வதற்கு அதிகாரமளித்தல்.

4. இடைக்கால ஏவுகட்டளைகள் அல்லது பேணுநரை அமர்த்துதல்.

5. பொதுவர்தீர்ப்பு நடவடிக்கைகளின் பொருட்டு உரிய வயது அடையாதவர் ஒருவருக்கு அல்லது மனச்சீர்கேடுற்ற ஆளுக்குக் காப்பாளர் ஒருவரை அமர்த்துதல்.

**மூன்றாம் இணைப்புப் பட்டியல்:—[நீத்தறவு செய்யப்பட்ட செய்சட்டங்கள்] 1945 ஆம் ஆண்டு நீத்தறவு மற்றும் திருத்தம் சட்டத்தின் (6/1945) 2 ஆம் பிரிவினாலும் I ஆம் இணைப்புப் பட்டியலினாலும் நீத்தறவு செய்யப்பட்டன.**

நான்காம் இணைப்புப்பட்டியல்: — [திருத்தம் செய்யப்பட்ட செய்சட்டங்கள்] அதே சட்டத்தின் 2ஆம் பிரிவினாலும் Iஆம் இணைப்புப் பட்டியலினாலும் நீத்தறவு செய்யப்பட்டன.